சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.26.06.2025.
O.S.No. 92/2024.
PW 1 : சரவணன் (வயது 45 ) த/பெ.வடிவேல்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வழக்கில் வாதி இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமான விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். வாதி வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வைத்தியலிங்கம் பிள்ளையின் சகோதரர்களுக்கு சொத்து சொந்தமானது என்று பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வைத்தியலிங்கம் சிதம்பரத்தின் பையன் என்றால்சரிதான். சிதம்பரம் பிள்ளைக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் வைத்தியலிங்கம் பிள்ளையை சேர்த்து 6 வாரிசுகள். வழக்கில் வைத்தியலிங்கம் தவிர மற்ற 5 நபர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சாட்சி தானாக முன்வந்து வைத்தியலிங்கம் தான் அவரது மற்ற சகோதரர்களுக்கான அனைத்து சொத்துக்களையும் அவர்களது அனுமதியின் பேரில் நிர்வாகம் செய்து வருகிறார். வைத்தியலிங்கம் பிள்ளையின் மற்ற 5 சகோதரர்கள் வெளியூரில் இருக்கிறார்கள். சிதம்பரம் பிள்ளையின் வாரிசுகளை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. சிதம்பரம் பிள்ளையின் குடும்ப சொத்துக்களை மேலாளராக இருந்து வைத்தியலிங்கம் பிள்ளை பார்த்து வருவதற்கு மற்ற வாரிசுகள் ஆவணம் மூலம் அனுமதி கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை வாய்கறாராக அனுமதி கொடுத்துள்ளார்கள். இறந்து போன சிதம்பரம் பிள்ளை தாவா சொத்தை பொறுத்து சமயபுரம் மாரியம்மன் கோவில் தண்ணீர் பந்தல் தர்மத்திற்காக கொடையாக எழுதி வைத்துள்ளார் என்றால் சிதம்பரம் பிள்ளை கொடையாக ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றாலும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே அதற்கான கொடையை செய்வதற்கு அனுமதி அளித்துள்ளார். வேறு யாருக்கும் சொத்தினை கொடுக்கவில்லை. தாவா சொத்தை சிதம்பரம் பிள்ளை

உயிருடன் இருக்கும் வரை அவர் தான்அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். தற்போதும் வைத்தியலிங்கம் மட்டுமே தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். சிதம்பரம் பிள்ளை அனுபவம் செய்ததை காட்டுவதற்கு ஏதேனும் ரசீதுகள் அல்லது வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதே போல் வைத்தியலிங்கமும் சொத்துக்களை அனுபவம் செய்து வருவதை காட்டுவதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளாரா என்றால் 1929 ஆம வருட கிரய ஆவணம் மட்டுமே வைத்துள்ளார்.அந்த ஆவணம் சிதம்பரம் பிள்ளை தாவா சொத்தை கிரயம் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். வைத்தியலிங்கம் பிள்ளை தாவா சொத்தை அனுபவித்து வந்த போது யாரேனும் இடையூறு செய்து வந்தார்களா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்களில் எப்போது பெயர் மாற்றம் ஏற்பட்டது என்றால் தெரியாது. அவர்களின் கவனத்திற்கு வந்த பிறகு நடவடிக்கை எடுத்துள்ளார்கள். ஆவணங்களில் பெயர் மாற்றம் ஏற்பட்டது பற்றி எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் 10 வருடங்களுக்கு முன்பு தெரியவந்தது. ஏன் 10 வருடகாலமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் வைத்தியலிங்கம் பிள்ளைக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. தாவா சொத்திலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்து சமயபுரம் கோவில் தண்ணீர்பந்தல் வைப்பதற்கு தர்ம செலவிற்காக கொடை ஆவணம் ( வா.சா.ஆ.2) எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கொடை ஆவணம் வா.சா.ஆ.2 எப்போது ஏற்பட்டது என்றால் 1953 ஆம் வருடம் ஏற்பட்டது. எதற்காக வைத்தியலிங்கம் பிள்ளையின் சகோதரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் அனைவரும் சிதம்பரம் பிள்ளை இறந்த பிறகு 30 வருட காலத்திற்கு முன்பே ஸ்ரீலங்கா சென்று விட்டார்கள் என்பதால் இந்த விவகாரத்தை வைத்தியலிங்கம் பிள்ளை பார்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். வா.சா.ஆ.2 கொடை ஆவணத்தின் பேரில்தான் சமயபுரம், கண்ணனூர் ஸ்ரீ மாரியம்மன் ரத உற்சவ அன்னதான தண்ணீர்பந்தல் தர்மம் என்று

பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல தவறானது. மேற்சொன்னவாறு பெயர் மாற்றம் செய்ததது தவறு என்று இரண்டாம் பிரதிவாதியிடம் முறையிட்டேனா என்றால் இல்லை. வழக்கு மட்டும் தாக்கல் செய்துள்ளேன். அதேபோல், வருவாய்துறை மேலதிகாரிகளிடம் எவ்வித முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். 1953 ல் சிதம்பரம் பிள்ளை எழுதி வைத்த வா.சா.ஆ.2 கொடை ஆவணத்தின் பேரில் தான் மேற்படி பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வருவாய் துறையினர் தாவா சொத்தை வேறு பொது உபயோகத்திற்கு பயன்படுத்தி விடுவார்கள் என்பதால் தான் வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றும் ஆனால் அவ்வாறு பொது உபயோகத்திற்கு தாவா சொத்து பயன்படுத்தப்படவில்லை என்பதால் வழக்கின் வழக்கு மூலம் இல்லை மற்றும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஐ தவிர மற்ற ஆவணங்கள் எதுவும் வழக்கில் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக வழங்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

/ Signed /
சரவணன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி

சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.26.06.2025.
O.S.No. 92/2024.
PW 2 : கலியமூர்த்தி (வயது 73 ) த/பெ.தேவநாசன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் வழக்கின் 3 ஆம் நபர் . வாதி தரப்பு 2 ஆம் சாட்சி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை. எனது ஆதார் அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் **வா.சா.ஆ.5**.

**குு.வி** - வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ Signed /
கலியமூர்த்தி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி